MAALAI MALAR 05 NOV 09

# மராத்தான் ஓட்டப்பந்தயம்



புதுடெல்லியில் பொதுநலனுக்கான மராத்தான் ஓட்டப்பந்தயம் கடந்த 5 வருடங்களாக ஆண்டுதோறும் நடந்து வருகிறது. இந்த வருடம் ஏர்டெல் மராத்தான் ஓட்டப்பந்தயம் என்ற பெயரில் நடந்த ஓட்டப்பந்தயத்தின் கருத்தாக 'குழந்தைகளின் நலன்' அறிவிக்கப்பட்டிருந்தது. எனவே குழந்தைகளுக்கு சரியான உணவு, உடல்நலம், இருப்பிடம், கல்வி ஆகிய அடிப்படை வசதிகள் அளிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விதமாக 3 ஆயிரம் பேரும் மற்றும் ஈஷா யோக மையம் உள்பட 75 அரசு சாரா நிறுவனங்களை சேர்ந்தவர்களும் இந்த ஒட்டப்பந்தயத்தில் கலந்து கொண்டனர். ஒலிம்பிக்கில் குத்துச் சண்டையில் வெண்கலப்பதக்கம் பெற்றவரும், தற்போது உலகளவில் குத்துச்சண்டையில் 75 கிலோ பிரிவில் முதலிடத்தை வகிப்பவருமான விஜேந்தர் சிங், ஈஷாவித்யா திட்டத்திற்கு ஆதரவு திரட்டும் வகையில் இந்த மாரத்தான் பந்தயத்தில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.